

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, 100 நாள் வேலை உறுதித் திட்ட நிதி, ரூபாய் 4000 கோடியை, தமிழ்நாட்டுக்கு வழங்காமல், ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து, கரூர் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி, கரூர் மாவட்டம் முழுக்க 42 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் எழுச்சியோடு நடைபெற்றது.



கடந்த 26.03.2025 அன்று இரவு 10 மணி அளவில் குன்னூர் மார்க்கெட் பகுதியில் உள்ள துணிக்கடையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டு அருகில் உள்ள கடைகளும் தீ பற்றி சேதமானது . இந்நிலையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, 29.03.2025 அன்று மார்க்கெட் பகுதிக்கு தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகளுடன் நேரில் சென்று தீக்கிரையான கடைகளை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு ஆறுதல் கூறினார். மேலும் முதல்வர் அவர்களிடமும் மாவட்ட ஆட்சியர், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி உரிய நிவாரணம் கிடைக்க வழி செய்வதாக தெரிவித்தார்.துரிதமாக செயல்பட்டு அருகிலுள்ள பிறகடைகளுக்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த தீயணைப்பு வீரர்களுக்கும் அரசுத்துறை அதிகாரிகளுக்கும்,காவல்துறையினருக்கும் ஒத்துழைப்பு கொடுத்து உதவிய மார்க்கெட் பகுதி தொழிலாளர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் தனது நன்றியும்! பாராட்டுகளையும் தெரிவித்தார்.

# சோழவரத்தில் ஒன்றிய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

சென்னை, மார்ச் 31-

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் மார்ச் 29 அன்று 100 நாள் (நூறு நாள்) வேலைவாய்ப்பு திட்டத்திற்கு நிதி வழங்காத மத்திய (மோடி) அரசை கண்டித்து பாடியநல்லூர் ஊராட்சியில் மொண்டியம்மன நகர் மார்கெட் அருகில் மற்றும் காரணோடை ஊராட்சியில் காரணோடை பஜார் அருகில் ஆகிய இரண்டு இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ . வே . க ர் ண ா க ர ன் முன்னிலையில்நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சோழவரம் தெற்கு ஒன்றிய, மாவட்ட நிர்வாகிகள், மகளிர் ஒன்றிய அணிகளின் துணை அமைப்பாளர்கள், மகளிர் பொதுமக்கள் மற்றும் 100 நாள் வேலை வாய்ப்பில் பணிபுரியும் மகளிர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை தேவஸ்தான திருக்கோயில்களுக்கு ரூ.1 கோடியாக இருந்த மானியத்தை

# ‘திராவிட மாடல்’ அரசு பொறுப்பேற்றது முதல் படிப்படியாக ரூ.19 கோடியாக உயர்த்தியிருக்கிறது!

## சட்டப்பேரவையில் உறுப்பினர் முத்துராஜா கேள்விக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

சென்னை, மார்ச் 31-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வினா விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

**டாக்டர் வை.முத்துராஜா :** பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், கருப்பட்டிப்பட்டி ஊராட்சி, ஆயிப் பட்டி கிராமத்தில் உள்ள கூத்தாயி அம்மன் கோயில் குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறிய அருள்மிகு கூத்தாயி அம்மன் திருக்கோயிலுக்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. தற்போது மண்டல குழு, மாநில வல்லுநர் குழு ஒப்புதல் பெறப்பட்டு, வரைபடம் தயாரிக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது. வெகு விரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் துவக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் வை.முத்துராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தேவஸ்தானத் திருக்கோயில்களுக்கு அரசு மானியம் கடந்த ஆட்சியில் ஒரு கோடியாக இருந்ததை திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு மூன்று முறை உயர்த்தி ரூ.8 கோடியாக வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட க ரு ப் ப ட் டி ப் ப ட் டி ஊராட்சி ஆயிப்பட்டியிலுள்ள அருள்மிகு கூத்தாகி அம்மன் திருக்கோயிலுக்கு குட முழுக்கு நடத்திட அனுமதி வழங்கிய மண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலை துறை அமைச்சர் அவர்களுக்கும் கிராம பொதுமக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதுக்கோட்டை மாநகராட்சி, வார்டு எண் 7-ல் அடப்பன் வயல் பகுதியில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு சிங்க முத்து அய்யனார் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா என்றும், புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் இருக்கின்ற கோயில்கள் எண்ணிக்கை எத்தனை? அந்த திருக்கோயில்களில் நித்திய பூஜைகள் நடத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்களை பேரவை தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.



**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு சிங்க முத்து அய்யனார் திருக்கோயில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்திருக்கோயிலுக்கு 02.07.2025 அன்று குடமுழுக்கு நடத்த தேதி நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே குடமுழுக்கு அன்றைய தினம் நடைபெறும். அவர் கூறிய புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் 225 திருக்கோயில்கள் இருக்கின்றன. ஆண்டு வருமானம் மிக குறைவாகும். ஆனால் இந்த திருக்கோயில்களில் 4 திருக்கோயில்களை தவிர்த்து, இதர திருக்கோயில்களுக்கு உண்டியல் வருமானம் கூட இல்லை. 225 திருக்கோயில்களில் 63 திருக்கோயில்களில் மட்டுமே உண்டியல்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் புதுக்கோட்டை தேவஸ்தானத் திருக்கோயில்களுக்கு ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாய் மானியம் என்று இருந்ததை படிப்படியாக உயர்த்தி இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 19 கோடி ரூபாய் அளவிற்கு மானியத்தை உயர்த்தி தந்து திருக்கோயில்களின் இருள் அகல ஒளி வீச செய்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடன் நாயகன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டும் கூடுதலாக மானியத்தை கேட்டிருக்கின்றோம். 573 பணியாளர்கள் இருக்கின்றார்கள். பணியாளர்களின் சம்பளம் கூட ரூ. 500 மற்றும் ரூ. 1000 என்று இருந்ததை இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 19 கோடி ரூபாய் அரசு மானியம் உயர்த்தியதால் இன்றைக்கு பத்தாயிரம் ரூபாய் வரையில் சம்பளம் பெறுகின்ற ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. அனைத்து திருக்கோயி ல்களையும் தொடர்ந்து சிறந்த முறையில் பராமரிக்க இந்த ஆண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மானியத்தை உயர்த்தி தருவதாக கூறியிருக்கின்றார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் வை.முத்துராஜா:** பேரவை தலைவர் அவர்களே, புதுக்கோட்டை அருள்மிகு விட்டோவா பெருமாள் கோயிலில் திருமண மண்டபம் கட்டுவதற்கு ரூ.6.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட திருமணஞ்சேரி ஊராட்சியில் உள்ள ஸ்ரீ பெரியநாயகி அம்பாள் உடன் பரிமளேஸ்வரர் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது. இக்கோயிலின் சிறப்பு அம்சங்கள் திருமணம் ஆகாத ஆண்கள் மற்றும் பெண்கள் இந்த ஆலயத்தில் தரிசனம் செய்தால் விரைவில் திருமணம் ஆகும் என்பது ஐதீகம். நம் அண்டை மாநிலத்திலிருந்தும் பிற மாவட்டங்களில் இருந்தும் தரிசனம் செய்ய தினசரி 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் வந்து செல்கின்றனர். மேலும் இக்கோயிலின் சுப முகூர்த்த நாட்களில் மட்டும் மாதத்திற்கு 20 முதல் 25 திருமணங்கள் நடைபெறுகின்றன.

மேற்கண்ட கோயிலுக்கு சொந்தமான இடம் உள்ளதால் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து ஒரு புதிய திருமண மண்டபத்தை கட்டி தரவும், இக்கோயிலுக்கு சொந்தமான குளத்தை சுத்தம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொண்டிடவும் அரசு முன்வருமா என்பதை பேரவை தலைவர் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** பேரவை தலைவர் அவர்களே, அருள்மிகு சுகந்த பரிமளேஸ்வரர் திருக்கோயில் என்பது திருமண பரிகார தலமாகும். ஒவ்வொரு முகூர்த்தத்திற்கும் குறைந்தது 10 லிருந்து 15 திருமணங்கள் நடைபெறுகின்றன. அதை கருத்தில் கொண்டு தான் அதே தொகுதியில் அமைந்துள்ள மற்றொரு திருக்கோயிலான விக்டோபா திருக்கோயிலில் ரூ.6.70 கோடி செலவில் திருமண மண்டபம் கட்டப்பட்டு வருகிறது. அருள்மிகு பரிமளேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலமும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான அனுமதியோடு வருகின்ற மானியக் கோரிக்கையில் திருமண பரிகார தலமான அந்த திருக்கோயிலிலும் திருமண மண்டபம் கட்டப்படுவதற்கு அறிவிப்பு வெளியிடப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் மத்திய மாவட்டம், சேலம் மாநகரம், 48வது வட்டத்தைச் சேர்ந்த ராமலிங்கம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Sus pension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 29.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா ,கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம் எல் ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி. சுகவனம், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமானோர் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்வீடி.கோபால் ஏற்பாட்டில் 100 நாள் வேலை நிதியை வழங்கக்கோரி ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் உறுதிமொழி ஏற்பு மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன் தலைமையில் ஜிட்டான்டஅள்ளி மற்றும் அனுமந்தபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாநில நிர்வாகி சூடப்பட்டி சுப்பிரமணி,மாவட்ட பொருளாளர் முருகன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சந்திரசேகர்,முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் இல.கிருஷ்ணன்,விவசாய அணி ஏ.வி.குமார்,இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரிபிரசாத் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் கலந்து கொண்டனர்.



நாகப்பட்டினம் மாவட்டம் திருமகல் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் 100 நாள் வேலைஉறுதி திட டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ் நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திருமருகல் மெயின்ரோட்டில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் கண்டன உரையாற்றினார். உடன் மாவட்ட கழக அவைத்தலைவர் ப. செல்வம் திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ. செங்குட்டுவன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஆர். பன்னீர்செல்வம், திட்டச்சேரி பேரூர் செயலாளர் எம். முகமது சுல்தான், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ். சந்தோஷ், மாவட்ட அயலக அணி துணைத்தலைவர் ஆ..விஜய கணபதி மற்றும் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோயில் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செம்பனார்கோவில் பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன் 100 நாள் வேலைஉறுதி திட டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ் நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேல், செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எம். அன்பழகன்,. தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி. எம்.ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத் சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய கழகநிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.